# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)

*தொலைபேசி எண் 24357580.*


**வழக்கு எண். 24469 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.**

முன்னிலை : திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் : திருமதி. எம். முனியம்மாள்,<br>க/பெ. (லேட்) ப. மாரியப்பன்,<br>பேராயம்பட்டு,<br>பெருந்துறைப்பட்டு அஞ்சல்,<br>தண்டராம்பட்டு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம் – 606 753.

பொது அதிகார அமைப்பு : பொதுத் தகவல் அலுவலர்,<br>செங்கம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிட்.,<br>67, குளத்துமேட்டு தெரு,<br>துக்காப்பேட்டை,<br>செங்கம் – 606 701,<br>திருவண்ணாமலை மாவட்டம்.

---------

மனுதாரர் திருமதி. முனியம்மாள் 27.01.2010 தேதியிட்ட கடிதத்தில் அவரது சார்பாக திரு. மு. பொன்னுசாமி விசாரணைக்கு அனுமதித்து எழுதிய கடிதத்தின் அடிப்படையில் திரு. மு. பொன்னுசாமி விசாரணைக்கு வந்திருந்தார். திரு. ஆர். கண்ணன், பொதுத் தகவல் அலுவலர் / செயலர், செங்கம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிமிடெட், செங்கம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 15.07.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 09.06.09 அன்று வழக்கு எண். 28079/விசாரணை/08 நாள் 09.06.09 அன்று இவ்வாணையம் விசாரணை செய்து இரண்டு வாரத்திற்குள் மனுதாரருக்கு தகவல் தருமாறு தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் 25.06.09 அன்று தகவல் அனுப்பியதாக தெரிவித்தார். விசாரணையில் மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் குறிப்பிட்ட இரசீது புத்தகத்தின் நகல் தரப்படவில்லை என்று தெரிவித்தார். விசாரணையின் போது அனைத்து ஆவணங்களும் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு காட்டப்பட்டது. விசாரணையில் மனுதாரர் குறிப்பிட்டு ஒரு சில இரசீதுகளின் நகல்கள் தேவை என்று தெரிவித்ததன் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு நேரடியாக அதன் நகல்கள் வழங்கப்பட்டது. மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் விசாரணையின் முடிவில் முழுத் தகவலும் பெற்றுக் கொண்டதாக தெரிவித்ததால் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 24469/09</u>**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**செங்கம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிட்.,**
**67, குளத்துமேட்டு தெரு,**
**துக்காப்பேட்டை,**
**செங்கம் – 606 701,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

**திருமதி. எம். முனியம்மாள்,**
**க/பெ. (லேட்) ப. மாரியப்பன்,**
**பேராயம்பட்டு,**
**பெருந்துறைப்பட்டு அஞ்சல்,**
**தண்டராம்பட்டு வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம் – 606 753.**